FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301635

1. District : Madurai PS: V K K Year: FIR No.: 13/2026 Date: 04/09/2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as Sections பிரிவுகள்: 7, 7A of P.C. Act 1988 as amended by P.C
(ii) Act சட்டம்: amended by Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: (Amendment) Act 2018
(iii) Act சட்டம்: Act 2018 & Sections பிரிவுகள்: 106 BNSS. Sec.
106 BNSS Act
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from 02.09.2026 Date to : 03.09.2026
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 14:00 Time to : 01:30 hrs.
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 03.09.2026 Time : 20:00 hrs.
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 04.09.2026 Time : 13:00 hrs.
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலமாக அளிக்கப்பட்டுள்ளது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் அமைந்துள்ளது 17 கி.மீ. தென்மேற்கு

Beat Number : (b) Address : மட்டாரப் போக்குவரத்து அலுவலகம்
முறைக் காவல் எண் முகவரி மதுரை (மாவட்டம்) மேலூர் தாலுகா

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : திரு. C. அன்புதென்னரசன் (b) Father's/ Husband's Name : அன்னரசன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 50/26 (d) Nationality : இந்தியன் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : மோட்டார் வாகன ஆய்வாளர் (g) Address : மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்
தொழில் முகவரி மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
A1. திரு. N. கார்த்திகேயன், வயது 57/26, மட்டாரப் போக்குவரத்து அலுவலர், மதுரை (மாவட்டம்). 2) திரு. அன்பரசன் வயது 54/26 இடைத்தரகர் மதுரை மாவட்டம். 3) திருமதி. பிரமாண்ட வயது 52/26, Data Entry Operator, RTO

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் மேடை, மதுரை (மாவட்டம்) வேலும் 5 நாள்கள்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பின வி சாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Sir
Separate Sheet attached
Pages 3 (three) to 14 (fourteen)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed C. Jeyaprakash Rank Inspector to take up the Investigation / Refused Investigation / transferred to PS. V.K. Pudur on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 04.09.2026 14:30 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் P.M. RAJESH PRABHU
Rank: நிலை Inspector No. எண் 1
Vigilance & Anticorruption
Madurai.

குற்றவாளிகளின் தொடர்ச்சி:

A4 திரு. B.லெட்சுமணன் என்ற கனி, வயது 47/2026,
த.பெ பாஸ்கரன்,
21, பகவத்சிங் தெரு, காளிமுத்து நகர்,
பொன்மேனி மெயின்ரோடு, மதுரை-10.
(தனியர்)

A5 திரு.S.மாரீஸ்குமார், வயது 53/2026,
த.பெ. சங்கரன்பிள்ளை,
எண்.78, கோவிந்தம்மாள் தெரு,
சதுரகிரி நிலையம், சோழவந்தான், மதுரை மாவட்டம.
(தனியர்)

A6 திரு. G.முத்துகுமார், வயது 50/2026,
த.பெ. கோபால், ,
53A, 4வது குறுக்கு தெரு,
அண்ணாநகர், விளாங்குடி,மதுரை-18.
(தனியர்)

A7 திரு. S.தங்கதுரை, வயது 51/2026,
த.பெ. சிவராமகிருஷ்ணன்,
1/14, முத்தையா நகர் 3வது தெரு,
கோவில்பாப்பாக்குடி, மதுரை.
(தனியர்)

A8 திருமதி.A.சரோஜா, வயது 66/2026,
த.பெ. அனந்தகிருஷ்ணன்,
46, மேலபொன்னகரம், 5வது தெரு, மதுரை.
(தனியர்)

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
மதுரை
04/09/2026

Honoured Sir,

Submitted

நேற்று 03.09.2026-ம் தேதி இரவு 20:00 மணிக்கு நான் (P.M.ரமேஷ் பிரபு), காவல் ஆய்வாளர், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது மதுரை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.C.சுந்தர முருகன் அவர்கள் அலுவலக ந.க. எண் 42/20261/I-2, நாள் : 03.09.2026-ன் படி அளித்த புகார் மனு மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களைப் பெற்றுப் பார்வையிட்டதில் புகார் மனுவில் உள்ள விவரம் பின்வருமாறு: அனுப்புநர் C.சுந்தர முருகன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், பழைய இராமநாதபுரம் ஆட்சியர் அலுவலகம், மதுரை. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க.எண். 42/2026/I-2, நாள் :03.09.2026 அய்யா, பொருள் : மதுரை மாவட்டம் - திடீர் இணை ஆய்வு - போக்குவரத்துத்துறை - மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பணியாற்றும் அலுவலர்கள் வாகனத் தகுதிச் சான்று, ஓட்டுநர் உரிமம், வாகனப்பதிவு மற்றும் வாகன அனுமதி சீட்டு (பெர்மிட்)பெறுவதற்காக வரும் பொதுமக்களிடம், ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், அவர்களது உதவியாளர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நேற்று 02.09.2026-ம் தேதி 14.00 மணி முதல் 03.09.2026-ம் தேதி 01.30 மணி வரை திடீர் இணை ஆய்வு மேற்கொண்டது - ரூ.1,80,000/- பணம் கைப்பற்றப்பட்டது - தனி அறிக்கை அனுப்புதல் - மேல் நடவடிக்கை எடுக்க கோருதல் குறித்து. நேற்று 02.09.2026-ம் தேதியன்று, மதுரை, மேலக்குயில்குடி, வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.N.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.செல்வம் ஆகியோர் வாகனத் தகுதிச் சான்று, ஓட்டுநர் உரிமம், வாகனப் பதிவு மற்றும் வாகன அனுமதி சீட்டு (பெர்மிட்)பெறுவதற்காக வரும் பொதுமக்களிடம், ஓட்டுநர் பயிற்சி பள்ளி உரிமையாளர்கள், அவர்களது உதவியாளர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாக லஞ்சம் வாங்குவதாக கிடைத்த இரகசிய தகவல் கிடைத்திருப்பதாக மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.P.M.ரமேஷ்பிரபு அவர்கள் தெரிவித்தார்கள். அதன்பேரில், அத்தகவலை எனது தகவலாளிகள் மூலம் விசாரித்து விட்டு, பின்பு, நான் மதுரை ஊ.த.க. பிரிவு அலுவலகத்திற்கு சென்று, காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ்பிரபு மற்றும் அவர்களது போலீஸ் பார்ட்டியினருடன் இணைந்து நேற்று (02.09.2026) மதியம் 12.30 மணிக்கு புறப்பட்டு, சுமார் 13.30 மணி முதல், மதுரை மேலக்குயில்குடி ரோட்டில் மதுரை மருந்துக் கட்டுபாடு இயக்ககம் அலுவலகத்தின் அருகிலும், மேற்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு எதிரே உள்ள காலியிடத்தில் நிறுத்தியிருந்த வாகனங்களின் அருகிலும் மறைவாக நின்று இரகசிய

கண்காணிப்பு மேற்கொண்டதில் மேற்படி அலுவலகம் பொதுமக்கள் நிறைந்து பரபரப்பாக காணப்பட்டது. அதனை சிறிது நேரம் கண்காணித்தும், இரகசிய விசாரணை செய்து மேற்படி இரகசிய தகவலை உறுதி செய்த பின்பு, 02.09.2026 ஆம் தேதி மதியம் சுமார் 14.00 மணிக்கு திடீர் இணை ஆய்வு மேற்கொள்ள மேற்படி மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று, விசாரித்து தெரிந்துகொண்ட மேற்படி அலுவலக வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன் அவர்களை சந்தித்துநான்,என்னையும், மதுரை ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ரமேஷ்பிரபு மற்றும் போலீஸ் பார்ட்டியினரை அவரிடம் அறிமுகம் செய்து, மேற்படி மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தகவல் தெரிவித்து, அவரை விசாரித்தபோது போது, அவர் அவரது பெயர் N.கார்த்திகேயன் என்றும், அவர் மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் கடந்த பிப்ரவரி 2025 முதல் வட்டாரப் போக்குவரத்து அலுவலராகப் பணிபுரிந்து வருவதாகவும், மேற்படி அவரது அலுவலகத்தில், திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, திரு.செல்வம் அவர்கள் பொறுப்பு மதுரை (தெற்கு) மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக கடந்த 17.12.2025ம் தேதி முதல் வாரம்தோறும் திங்கள், புதன் மற்றும் வெள்ளி ஆகிய கிழமைகளில் பணிபுரிந்து வருவதாகவும்,அவரது அலுவலகத்தில் வேலைப் பளு அதிகமாக இருப்பதால் அவரது வேண்டுகோளின்படி தனியர்கள் திரு.லெட்சுமணன் என்ற கனி, திரு.முத்துக்குமார், திரு.மாரீஸ்குமார் மற்றும் திருமதி.சரோஜா ஆகியோர்கள் தற்காலிமாக வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர், மேற்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன் அவர்களின் சம்மதத்தின் பேரில், மேற்படி அலுவலகத்தில் திடீர்இணை ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. அதன்பேரில், நான் மேற்படி அலுவலகத்தின் பொதுமக்கள் காத்திருப்பு அறையின் வடகிழக்கு மூலையில் உள்ள இரண்டு கண்ணாடி தடுப்பு அறைகளில் முதல் அறையில் அமர்ந்து பணிசெய்துகொண்டிருந்த தனியர் திரு.லெட்சுமணன் என்ற கனி என்பவரை சோதனை செய்ய முயன்றபோது அவர் அவரது பேண்ட்டின் வலது பக்க முன்பாக்கெட்டிலிருந்து கத்தையாக எடுத்து பணத்தை ஆஜர் செய்தார். அதனை நான் வாங்கி எண்ணி பார்த்தபோது அதில் பணம் ரூ.60,200/- (500X105, 200 X 30, 100 X 17) என இருந்தது. அப்பணத்தை பற்றி நான் மேற்படி லெட்சுமணன் என்ற கனியிடம் கேட்டபோது அவர் அப்பணத்தில் ரூ.7,000/- அவரது சொந்த பணம் என்றும் அதுபோக மீதிப் பணம் அனைத்தும் மேற்படி திரு.செல்வம் அவர்கள் கூறியதன்பேரில் பொதுமக்களிடம் இருந்து லஞ்சமாக பெற்றது என்றும், அதனை அன்றையதினத்திற்கான வாகனத் தகுதிச் சான்றிதழை வழங்குவதற்காக பெற்றது என்றும் அவருக்கு அப்பணிக்காக மேற்படி செல்வம் அவர்கள் தினமும் ரூ.500/-வழங்குவதாகத் தெரிவித்தார். அவருடைய சொந்த பணத்திற்கு சரியான முகாந்திரம் கூறாத காரணத்தினால் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம்

எனக் கருதி அப்பணம் ரூ.60,200/-த்தை நான் கைப்பற்றினேன். மேற்படி அறையின் தெற்கு பக்கம் அதற்கடுத்த அறையில் திரு.ச.மாரீஸ்குமார் (தனியர்) என்பவர் மேற்கு திசை நோக்கி அமர்ந்து வேலை பார்த்து கொண்டு இருந்தார்.அவரிடம் நான் விசாரித்தபோது அவர் அவரது பெயர் ச.மாரீஸ்குமார் என்றும் இன்றைய தினத்திற்கான வாகனத் தகுதி சான்றிதழுக்கான விண்ணப்பத்தை கணினியில் மேற்படி ஆய்வாளர் திரு.செல்வம் அவர்கள் கூறியதன்பேரில் ஏற்றிக்கொண்டு உள்ளதாகவும், மேலும் அவர் கப்பலூரில் உள்ள ஆனைமலை மோட்டார்ஸ் சம்பந்தப்பட்ட Renault வாகனத்திற்கு தற்காலிக மற்றும் நிரந்தர பதிவுகளை செய்து வருவதாகவும், இன்றையதினத்தில் மேற்படி நிறுவனத்திற்காக 6 வண்டிகள் மற்றும் ஒரு வெளிமாநில இன்னோவோ வண்டிக்கு நிரந்தரப் பதிவெண் வாங்குவதற்காக வந்து திரு.செல்வம் அவர்களை சந்தித்ததாகவும் கூறி, அவரது பேண்டின் இடது முன் பாக்கெட்டில் கத்தையாக வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தைப் பற்றி விசாரித்தபொழுது அது சாலை வரி மற்றும் விருப்ப எண்கள் பெறுவதற்காக வைத்துள்ளதாகத் தெரிவித்து, எவ்வளவு பணம் உள்ளது என்பது அவருக்கு தெரியாது எனத் தெரிவித்தார். அப்பணத்தை நான் வாங்கி எண்ணி பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.79,000/- (500x153, 200x11, 100x3) இருந்தது. அப்பணத்திற்கு அவரால் சரியான முகாந்திரம் கூற இயலவில்லை. மேலும் தனியாக அதில் உள்ள ரூ.270/- (50x2, 20x6, 10x5) அவரது செலவுக்கு வைத்துள்ள சொந்தப் பணம் எனக் கூறி தகுந்த முகாந்திரம் கூறியதால் அப்பணம் மட்டும் அவர் வசம் என்னால் கொடுக்கப்பட்டு, அதுபோக மீதி பணம் ரூ.79,000/-த்தை சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி அவற்றை கைப்பற்றினேன். மேற்படி வரவேற்பறையில் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் தெற்கு பக்க சுவர் அருகில்உள்ள மரக்கதவு அருகில் நின்றுகொண்டிருந்த விசாரித்து தெரிந்துகொண்ட திரு.தங்கதுரை என்பவரை நான் விசாரித்தபோது அவரது பெயர் S.தங்கதுரை என்றும் அவர் வாகன இன்சூரன்ஸ் ஏஜெண்டாக உள்ளதாகவும், அதுசம்பந்தமாக அடிக்கடி அவர் மேற்படி அலுவலகத்திற்கு வந்துள்ளதாகவும், தமிழ்சங்கம் ரோட்டில் உள்ள ஜே.ஜே. வாட்டர் சப்ளையர்ஸ் சாம்ஜெபராஜ் என்பவரிடம் ரூ.12,000/-த்தை அவரது வாகன இன்சூரன்ஸ்-க்காக வாங்கியதாகவும், இன்று சந்தேகம் கேட்பதற்காக மேற்படி அலுவலகத்திற்கு வந்ததாகவும், அதுபோக மீதி உள்ள பணம் அவரது சொந்த பணம் என்று கூறி அவரது பேண்டின் வலது பாக்கெட்டிலிருந்து எடுத்து பணத்தை கத்தையாக ஆஜர் செய்தார். அதனை நான் பெற்று எண்ணி பார்த்தபோது அதில் மொத்தம் ரூ.13,900/- (500x24, 100x19) இருந்தது. அதில் அவரால் ரூ.400/-க்கு மட்டும் சரியான முகாந்திரம் கூறப்பட்டதால் அப்பணத்தை மட்டும் நான் அவரிடம் திரும்பி கொடுத்தேன். அதுபோக மீதமுள்ள ரூ.13,500/-ஐ நான் சந்தேகத்தின்பேரில் கைப்பற்றினேன். அதனையடுத்து கதவிற்கு மேற்கு புக்கம் சந்தேகத்திற்கு இடம் அளிக்கும் வகையில் நின்றுகொண்டிருந்தவிசாரித்து தெரிந்துகொண்ட திருமதி.சரோஜா என்பவரை நான் மதுரை

ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.பாரதிபிரியா அவர்களின் உதவியுடன் விசாரித்தபோது அவரது பெயர் A.சரோஜா என்றும் அவர் மேற்படி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பி-1 இருக்கையில் பணிபுரியும் திருமதி.இந்திராணி அவர்களுக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவர் கேட்டுக்கொண்டதால் நேற்று (02.09.2026) காலை சுமார் 11.00 மணிக்கு மேற்படி அலுவலகத்திற்கு வந்து மேற்படி இந்திராணி அவர்களின் உயர் அதிகாரிகளின் அனுமதியுடன் அவருக்கு உதவியாக வரி செலுத்தாத வாகனங்களுக்கான Demand Notice-ஐ மடித்து வரிசை பிரகாரம் அடுக்கிவைத்துவிட்டு வெளியே வந்ததாகவும், அவரிடம் ரூ.2,200/- (500X4, 100X2) உள்ளதாக கூறி அதனை அவரது கணவரின் மருத்துவ செலவுக்காக வைத்திருப்பதாகத் தெரிவித்தார். அவரிடம் நான் அதுசம்பந்தமாக விசாரித்தபோது அதற்கு அவர் சரியான முகாந்திரம் கூறவில்லை. அதில் தனியாக ரூ.200/- ஐ மட்டும் தனது சொந்த செலவிற்காக வைத்திருப்பதாகக் கூறியதால் அந்த பணம் மட்டும் என்னால் திருப்பி வழங்கப்பட்டது. அதுபோக மீதி பணம் ரூ.2,000/- (500x4) நான் சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றினேன். மேலும் அவரிடம் வேறு ஏதாவது பணம் உள்ளதா என விசாரித்தபோது அவர் அவரது பையில் உள்ள மணிபர்ஸில் ரூ.1,900/- உள்ளதாகவும், அது இருசக்கர வாகன எண் TN 58 T 6501 -க்கு காப்புச் சான்று, பசுமை வரி, பதிவுச்சான்று புதுப்பித்தல் கட்டணம் செலுத்துவதற்காக வைத்துள்ளதாக கூறி அந்த பை தபால் பிரிவில் வைத்துள்ளதாகத் தெரிவித்து அதனை கொண்டுவந்து காண்பித்தார். அவர் கூறிய காரணம் ஏற்றுக்கொள்ளும்படி இருந்ததால் அப்பணத்தை நான் அவரிடமே திருப்பி கொடுத்தேன். மேற்படி அலுவலகத்தில் போட்டோ எடுக்கும் அறை கணினியுடன் கூடிய டேபிள், சேர்களுடன் காணப்படுகிறது. அந்த அறையில் விசாரித்து தெரிந்துகொண்ட Data Entry Operatorதிரு.சிவசுப்பிரமணியம் அவர்கள்தெற்கு திசை நோக்கி அமர்ந்து வேலை பார்த்துகொண்டிருந்தார். அவரை நான் விசாரித்தபோது அவர் அவரது பெயர் திரு.S.A.சிவசுப்பிரமணியம் என்றும், அவர் சென்னையை சேர்ந்த Bonton என்ற தனியார் நிறுவனத்தில் பணிபுரிவதாகவும், அதன்மூலமாக மேற்படி அலுவலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும், அவரது பணியானது லைசென்ஸ் எடுக்க வரும் நபர்களை புகைப்படம் எடுத்து இணையத்தில் பதிவேற்றம் செய்தபின் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தை அலுவலக எழுத்தரிடம் ஒப்படைப்பதாக தெரிவித்தார். அவரிடம் பணத்தை பற்றி விசாரித்தபோது அவர் அவரது மணிபர்ஸில் இருந்து பணம் ரூ.3,500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்தைப் பற்றி நான் விசாரித்தபோது அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அப்பணம் என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் உள்ள பதிவறை எழுத்தர் அறையில் விசாரித்து தெரிந்துகொண்ட மேற்படி திரு.முத்துக்குமார் (தனியர்) என்பவரை நான் விசாரித்தபோது மேற்படி அறையில் வேலை பார்க்கும் மேற்படி ஆனந்தபிரகாஷ் அவர்கள் விடுப்பில் உள்ளதாகவும், திரு.முத்துக்குமார் அவர்கள் கடந்த 15 ஆண்டுகளாக மதுரையில் உள்ள

வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் புரோக்கராகப் பணிபுரிந்து வருவதாகவும், அவர் லைசென்ஸ்,FC, Permit போன்ற காரணத்திற்காக தான் புரோக்கராக இருந்து பொதுமக்களிடமிருந்து லஞ்சப் பணத்தை பெற்று மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன் அவர்களுக்கு அவர் கூறும் இடத்திற்கு சென்று லஞ்சப்பணத்தை அவரிடம் ஒப்படைத்து வருவேன் என்றும், அவருக்கு இத்தொழில் மூலம் ஒரு நாளைக்கு ரூ.2,000/- வரை கிடைக்கும் என்றும், மேற்படி அலுவலகத்திற்கு நேற்று (02.09.2026) காலையில் சுமார் 11.00 மணிக்கு வந்ததாகவும், மேற்படி கார்த்திகேயன் அவர்கள் சற்று தாமதமாக மதியம் சுமார் 12.30 மணியளவில் தான் வந்ததாகவும் கூறி அவரிடம் ரூ.540/- இருப்பதாகக் கூறி அவரின் பேண்டின் வலது முன்பக்க பாக்கெட்டில் வைத்திருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அவர் அப்பணத்தில் ரூ.40/- தான் பஸ்ஸில் செல்வதற்காக வைத்திருப்பதாக கூறி காரணம் தெரிவித்ததால் அப்பணத்தை மட்டும் நான் ஒப்படைத்தேன். அதுபோக மீதிபணம் ரூ.500/- அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் பதிவறைக்கு அடுத்து தெற்கு பக்கம் சுமார் 3 அடி உயரமுள்ள ஒரு பீரோவிற்கு அருகில் வடகிழக்கு மூலையில் உள்ள இரும்பு ரேக்கின் இரண்டாவது அடுக்கில் கோப்புகளுக்கு இடையே பணம் கத்தையாகக் காணப்பட்டது. அதனை நான் எடுத்து எண்ணிப்பார்த்த போது அதில் பணம் ரூ.19,800/- (500x35, 200x7, 100x9) இருந்தது. அதனைபற்றி வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன் அவர்களிடம் நான் விசாரிக்க அவர் மேற்படி அறையை TNSTC-க்காக ஒதுக்கப்பட்ட அறை என்றும் அதனை அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள் எனத் தெரிவித்தார். எனவே அப்பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அப்பணத்தை நான் சந்தேகத்தின் அடிப்படையில் லஞ்சப்பணம் எனக் கருதி கைப்பற்றினேன். மேலும், மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலர்களான வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன் அவர்களிடம் அவரது அறையில் வைத்து நான் விசாரித்தபோது அவர் அவரது சட்டையின் இடது பக்க முன் பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.620/-ஐ எடுத்து ஆஜர் செய்து, அப்பணத்தைப் பற்றிய விவரத்தை அவரது அலுவலகத்தில் பராமரித்து வரும் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்யவில்லை எனத்தெரிவித்து அப்பணத்திற்கான சரியான முகாந்திரம் கூறியதால் அப்பணம் கைப்பற்றப்படவில்லை. மேற்படி கார்த்திகேயன் அறைக்கு மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 திரு.செல்வம் அவர்களை அழைத்து அவரிடம் உள்ள பணத்தைப் பற்றிக் கேட்டபோது அவர் அவரது பேண்டின் வலது பக்க முன்பாக்கெட்டில் வைத்திருந்த ரூ.1500/- (200x1, 100x13) எடுத்து ஆஜர் செய்தார். அப்பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் கூறததால் அப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேற்படி நபர்கள் மேற்படி அலுவலகத்திற்கு பணத்தை கொண்டு வந்ததற்கான காரணத்தை சரியாக கூறாமல், சந்தேகம்படும்படி நடந்து கொண்டதாலும்,மேலும், மேற்படி அலுவலகத்தில் கட்ட வேண்டிய

பணம் அனைத்தும் ஆன்-லைன் மூலமாகத்தான் செலுத்த வேண்டி இருப்பதாலும், மேற்படி அலுவலகத்திற்கு பணம் கொண்டு வரத் தேவை இல்லை என்பதாலும், மேலும் அவர்கள் கூறியபடி அதற்கான ஆவணங்கள் ஏதும் இல்லாததாலும், மேற்படி நபர்களிடமிருந்து மொத்தம் ரூ.1,80,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனைதொடர்ந்து மேல் விசாரணைக்காக வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன் அவர்கள் ஆஜர் செய்த பதிவேடுகள் மற்றும் விண்ணப்பங்களை கைப்பற்றப்பட்டது. அவைகள் பின்வருமாறு :

S.No	Documents	Written Page Nos.
1.	Attendance Register maintained at the O/o the Regional Transport Officer, Madurai South for the year 2026.	Pages. 01 to 72
2.	Attendance Register for the deputation officials maintained at the O/o the Regional Transport Officer, Madurai South for the year 2026.	Pages 01 to 20
3.	Attendance Register for the Bonton workers maintained at the O/o the Regional Transport Officer, Madurai South for the year 2026.	Pages 01 to 17.
4.	Attendance Register for the Permission/Other duty workers maintained at the O/o the Regional Transport Officer, Madurai South for the year 2026.	Pages 01 to 48.
5.	Movement Register for the Officials maintained at the O/o the Regional Transport Officer, Madurai South for the year 2026.	Pages 01 to 17.
6.	Casual Leave Register for the Officials maintained at the O/o the Regional Transport Officer, Madurai South for the year 2026.	Pages 01 to 131.
7.	Personal Money deposit Register maintained at the O/o the Regional Transport Officer, Madurai South for the year 2026.	Pages 01 to 325.

S.No.	Applicationof New Driving License Nos (Signed by RTO Tr.N.Karthikeyan)
1.	3641339226
2.	3134147326
3.	3565391226
4.	3572603526
5.	3091946626
6.	3661937926
7.	3548284826
8.	3653559326
9.	3824041126
10.	3868634326
11.	3602378626
12.	3746527026
13.	3155930926
14.	1458988626
15.	3738554326
16.	3661968026
17.	3483041526
18.	3599316026
19.	3509009426
20.	3617629526
21.	3665691926
22.	3618869626

23.	3799228326
24.	3688430826
25.	3230760626

26.	3599881126
27.	3605876626
28.	3807087026

மேலும், மோட்டார் வாகன ஆய்வாளர். நிலை-1 திரு.செல்வம் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட புதிய வாகனங்களுக்கான பதிவுச்சான்றுக்கான விண்ணப்பங்கள் மற்றும் ஓட்டுநர் உரிமத்திற்கான விண்ணப்பங்கள் விவரம் கீழ்வருமாறு:

S.No	New RC Application's Numbers
1.	TN 26082578344330
2.	TN 26082678559367
3.	TN 26090269671807
4.	TN 26090119560169
5.	TN 26082838953306
6.	TN 26082718814969
7.	Chasis No.MB 1ASPCC6TEKX1304
8.	Chasis No. MB 1AUPCC0TEKW8456
9.	TN 26083169265678
10.	TN 26090159458736
11.	TN 26090179446648
12.	TN 26090189598268
13.	TN 26090169811798
14.	TN 26090179630273
15.	TN 26083189289695
16.	TN 26083199403258
17.	TN 26090169629043
18.	TN 26083189405094
19.	TN 26090139637828
20.	TN 26090159445400
21.	TN 26083159258826
22.	TN 26083119279245
23.	TN 26090149444418

24.	TN 26083129271590
25.	TN 26082979045650
26.	TN 26090139471947
27.	TN 26090129546131
28.	TN 26082798683086
29.	TN 26090119551324
30.	TN 26082999047184
31.	TN 2609015955533
32.	TN 26081116229141
33.	TN 26090139543268
34.	TN 26082969033937
35.	TN 26082778624724
36.	TN 26090199635492
37.	TN 26083149262888
38.	TN 26090179441228
39.	TN 26090189481800
40.	TN 26090179518055
41.	TN 26090199496822
42.	TN 26090129622887
43.	TN 26082989069410
44.	TN 26090159641878
45.	TN 26090159616109
46.	TN 26083129269449
47.	TN 26090169441558
48.	TN 26090149640321
49.	TN 26090129634994
50.	TN 26090189468645

51.	TN 26090159515713
52.	TN 26082979047727
53.	TN 26090199485852
54.	TN 26082959080522
55.	TN 26090129575278
56.	TN 26090179442617
57.	TN 26090159441793
58.	TN 26090159440414
59.	TN 26082989001794
60.	TN 26082898964539
61.	TN 26082698587339
62.	TN 26090179621910
63.	TN 26083169277456
64.	TN 26082999003191
65.	TN 26080575171727
66.	TN 26082999108965
67.	TN 26082858967818
68.	TN 26090119633206
69.	TN 26090159578728
70.	TN 26090189567220
71.	TN26090189605823
72.	TN26083149381613
73.	TN26090199644932
74.	TN26090179627551
75.	TN26083119277914
76.	TN26090169578109
77.	TN26090269655154
78.	TN26090229664984
79.	TN26090229681753
80.	TN26090129640741
81.	TN26090289681498
82.	TN26090129546383
83.	TN26090229677285
84.	TN26083179350368

85.	TN26083129386930
86.	TN26083129300441
87.	TN26083179341731
88.	TN26090189638611
89.	TN26090129621796
90.	TN26082718799888
91.	TN26082979069495
92.	TN26082969102555
93.	TN26090219654020
94.	TN26082538361303
95.	TN26090199607474
96.	TN26090199623492
97.	TN26082969087116
98.	TN26082969109851
99.	TN26090189603931
100.	TN26083139381357
101.	TN26090179609745
102.	TN26083159360720
103.	TN26082999016280
104.	TN26082949035521
105.	TN26090119595958
106.	TN26081246411125
107.	TN26082748734144
108.	TN26090149628854
109.	TN26090129631409
110.	TN26083199398258
111.	TN26083199186988
112.	TN26090119439724
113.	TN26082818853610
114.	TN26083199291533
115.	TN26090199454716
116.	TN26090149443273
117.	TN26081376469352
118.	TN26083199398258

S.No.	Application of New Driving License Nos.(Signed by MVITr. A. Selvam)
1.	3499217226
2.	3706205226
3.	3572493626
4.	3649969126
5.	3551023626
6.	3629665126
7.	3645877926
8.	3564328326
9.	3597366626
10.	3613075626
11.	3787159026
12.	3717823326
13.	3717711326
14.	3606623926
15.	3613519826
16.	3613567926
17.	3607287026
18.	3606879026
19.	3739836626
20.	3613157226
21.	3921364325
22.	3686978326
23.	3627646226
24.	3594406526
25.	3308530626
26.	3105477626
27.	3596944626
28.	3738846626
29.	3738667126
30.	3603356926
31.	3516478926
32.	3580565226
33.	3809256126
34.	3765310426
35.	3583997526
36.	3454422326
37.	3848732926
38.	3765655726
39.	3547766026
40.	3618670126
41.	3646220626
42.	3603390426
43.	3880461626
44.	3789618126
45.	3575052326
46.	3574718926
47.	3790059526
48.	3697497126
49.	2437115626
50.	3546924926
51.	3824578526
52.	3823954326
53.	3555459526
54.	3657096126
55.	3612927526
56.	3713024926

மேலும், மேற்படி அலுவலகத்தின் தனியர் திரு.மாரீஸ்குமார் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட புதிய வாகனங்களுக்கான தற்காலிகப் பதிவுச்சான்றுக்கான விண்ணப்பங்கள் விவரம் கீழ்க்காணும் :

1.	Application for temporary Vehicle Registration Vide. Application No.TN26090249653350 in the name of Tmt.Parimala Raghavan submittedby Anamallais Motors Pvt. Ltd,Madurai.
2.	Application for temporary Vehicle Registration Vide. Application No.TN26090219662643 in the name of Tmt.Arockia Jeffree submittedby Anamallais Motors Pvt. Ltd,Madurai.
3.	Application for temporary Vehicle Registration Vide. Application No.TN26090189610737 in the name of Tmt.Indhumathi submittedby AnamallaisMotors Pvt, Ltd,Madurai.
4..	Application for temporary Vehicle Registration Vide. Application No.TN26090129636142 in the name of Tmt.Sivasuriya submittedby EVM AutomobilesPvt, Ltd, Madurai.
5..	Application for temporary Vehicle Registration Vide. Application No.TN26090129518480 in the name of Tmt.Muniyammal Ganesan submittedby EVM AutomobilesPvt, Ltd, Madurai.
6..	Application for temporary Vehicle Registration Vide. Application No.TN26090169517847 in the name of Tmt.Manju Priya submittedby AnamallaisMotors Pvt, Ltd, Madurai.
7.	Application for temporary Vehicle Registration Vide. Application No.TN26082738826704 in the name of Tmt.Shima from other state Chattisgarh Raipur district submittedby AnamallaisMotors Pvt, Ltd, Madurai.

மேலும் சோதனையின் போது மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.செல்வம் மற்றும் மேற்படி அலுவலகப் பணியாளர்கள் மற்றும் தனியர்கள் என மொத்தம் 25 நபர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி சோதனையானது இன்று 03.09.2026ம் தேதி அதிகாலை 01.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின்போது சந்தேகத்தின்பேரில் கைப்பற்றப்பட்ட மொத்தப் பணம் ரூ.1,80,000/-(ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்),216 ஆவணங்கள்,25 வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து மதுரை (தெற்கு) வட்டாரப் போக்குவரத்து அலுவலர் திரு.கார்த்திகேயன், மோட்டார் வாகன ஆய்வாளர்

நிலை-I திரு.செல்வம்,BONTON Software Pvt. Ltd., Data Entry Operator திரு. சிவசுப்பிரமணியன் மற்றும் தனிநபர்களான திரு. லெட்சுமணன் என்ற கனி, திரு. மாரீஸ்குமார், திரு. முத்துக்குமார், திரு.தங்கதுரை மற்றும் திருமதி.சரோஜா ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இந்த புகாரை அளிக்கிறேன். Sd/- XXXX (C.சுந்தரமுருகன்) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1) மதுரை மாவட்டம், மேலக்குயில்குடி, மதுரை (தெற்கு),வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வுக் குறிப்புரை 02.09.2026 14.00 மணி முதல் 03.09.2026 01.30 மணி வரை. 2) கைப்பற்றப்பட்ட ரொக்கப்பணம் ரூ.1,80,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) 3) கைப்பற்றப்பட்ட 216 ஆவணங்கள். 4) மேற்படி அலுவலகத்தில் 25 நபர்களிடம் பெற்ற எழுத்துபூர்வமான வாக்குமூலங்கள்.

Sir, received the petition on 03.09.2026 at 20:00 hrs, received instructions from higher officials and registered a case in Madurai V&AC Cr.No.13/2026 u/s 7, 7A of P.C. Act, 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 this day (04.09.2026) at 13:00 hrs. Sd/-XXXXX (P.M.RAMES PRABHU), Inspector of Police, Vigilance & Anti Corruption detachment, Madurai 04/09/26.

The original FIR is submitted to the Hon'ble Principal District Judge, Madurai along with report of the District Deputy Inspection Cell Officer, District Inspection Cell Office, Madurai in ந.க. எண் 42/20261/I-2, நாள் 03.09.2026-ன், Proceeding of Joint Surprise Check Report dt: 02.09.2026 and the mentioned 8 accused Statements. Other copies of FIR were sent to the officers concerned.

Inspector of Police
Vigilance and Anti - Corruption,
Madurai
04/09/2026